# விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை : ஓர் ஒப்பீட்டு ஆய்வு

கே.ரகுநாதன்


### ஆய்வுச்சுருக்கம்

*விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது பன்மைத்தன்மை கொண்ட, முரண்பாடுகளை யுடைய ஒரு சமுதாய அமைப்பிற்கு மிகவும் பொருத்தமானதாகக் கருதப்படுகின்றது. இவ் ஆய்வானது இப் பிரதிநிதித்துவமுறை உருவாக்கத்திற்கான பல்வேறு பின்னணிகள் பற்றியும், அதன் வெவ்வேறு வகைகள் பற்றியும் கோட்பாட்டு, மற்றும் நடைமுறை ரீதியான அணுகு முறைகளைக் கொண்டுள்ளது. இங்கு ஒவ்வொரு தேர்தல் முறைகளதும் தன்மைகள் விரிவாக ஆய்வுசெய்யப்பட்டுள்ளதுடன் அவை பற்றிய மதிப்பீட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கின்றது.*


### அறிமுகம்

நவீன ஜனநாயகமுறையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவமானது மிகவும் முக்கியத்துவம் பெற்று விளங்குவதுடன் அநேக நாடுகளால் வேண்டப்படும் ஒரு தேர்தல் முறையாகவும் இருந்து வருகின்றது. ஜனநாயக நாடுகள் தாம் நீண்ட காலமாகப் பின்பற்றி வருகின்ற எளிய பெரும்பான்மை முறையிலான (simple majority system) தேர்தல் முறையில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளைத் தமது அனுபவத்தின் மூலமாக உணர்ந்து அவற்றினை நிவர்த்தி செய்யும் முகமாகவே விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அவ்வந் நாடுகளில் அறிமுகம் செய்துள்ளன. இம்முறையானது எளிய பெரும்பான்மை முறையில்லாத தேர்தல் முறையினைப் போலல்லாது மக்களது விருப்புக்களைக் கூடுமானவரை சட்டசபையில் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கின்றது.

பன்மைத்தன்மை கொண்ட சமூக அமைப்புடைய (plural society) ஒரு நாட்டில் இம்முறையானது கூடுதலாக வேண்டப்படுவ தாகவும், இதனால் நாட்டிலுள்ள சகல வகுப்பினருக்கும் பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு கருவியாகவும் விகிதாசாரப் பிரதிநிதித்து வமுறை கொள்ளப்படுகின்றது. இதனால் இம்முறை எந்தவோர் நாட்டிலும் சிறுபான்மை இனம் சார்பான கட்சிகளுக்கும் சிறிய கட்சிகளுக்குமான (minority parties and smaller parties) ஒரு பாதுகாப்புக் கருவியா கவும் தொழிற்படுகின்றது. விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை தொடர்பான அடிப்படைக் கோட்பாடானது 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் G.G. ஆந்திரே (G.G.Andrae) தோமஸ் கெயர் (Thomas Hare) ஜோன் ஸ்ருவாட்மில் (John Stuart Mill) போன்றோரால் வகுக்கப்பட்டதாகும்.

### வரலாற்றுப் பின்னனி (Historical Background)

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் அறிமுகம் பற்றிய பின்னணியை ஆய்வுசெய்த கால் பிறவுனியஸ் (Karl Braunias) என்பவர் இருவேறுபட்ட கோணங்களில் இதனை

நோக்கியுள்ளார். அவையாவன சிறுபான்மை யினரின் பாதுகாப்பு பற்றிய பார்வை (View of minority protection) சோசலிசக் கட்டம் (socialist phase) என்பனவாகும். இப்பிரதிநிதித்துவ முறையின் அறிமுகத்தினை ஆரம்பத்தில் பல இன சமூகத்தைக் கொண்ட ஐரோப்பியநாடுகளிலேயே நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. அதாவது டென்மார்க்கில் 1855இலும், பெல்ஜியத்தில் 1889இலும் சுவிச்சர்லாந்தில் 1891இலும், பின்லாந்தில் 1906இலும் இம்முறை அறிமுகப்படுத்தப் பட்டிருக்கின்றது.

பல ஜனநாயக நாடுகள் எளிய பெரும்பான்மை முறையிலான தேர்தல் முறையைத் தொடர்ச்சியாக நிலவச் செய்வதிலே பல சவால்களை எதிர்நோக்கின. அவ்வேளையில் சிறுபான்மை இனத்தவர்களுக்குரிய பிரதிநிதித்துவத்தினைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டிருந்தது.[1] மாறாக இரண்டாவது நோக்கில் சமூக கலாச்சார ரீதியாக ஓரினத்தன்மையுடைய சமூக அமைப்பைக் கொண்ட (Homogeneous society) நாடுகளில் கூட வாக்குரிமையை விஸ்தரிப்பதிலும் விகிதாசாரத்தினைப் பேணிக்கொள்வதிலும் சிக்கல்கள் எழுந்திருந்தன. இந்த நாடுகளில் அதிகரித்துவந்த தொழிலாளர் வகுப்பினர் சட்டசபையில் தமக்குரிய பிரதிநிதித்துவத்தினைப் பெறும் நோக்கில் உரிய தேர்தல் முறையினை வேண்டிநின்றன. இதேகாலப் பகுதியில் வளர்ச்சியடைந்த அரசியல் கட்சிகள் கூடத் தமது பலத்தினைத் தொடர்ச்சியாக நிலைநிறுத்திக்கொள்ளும் நோக்கில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் தேவைப்பாட்டை வலியுறுத்தி வந்தன.[2]

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் அறிமுகமும் வயது வந்தோர் வாக்குரிமையும் (Adult suffrage) அறுதிப் பெரும்பான்மை முறையின் கீழ் இருந்த பாதகமான தன்மைகளை நீக்கி மக்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கும், உரிய பிரதிநிதித்துவத்தினைப் பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக்களை இலகுபடுத்தி இருக்கின்றன.[3] ஸ்கொட்லாந்தில் 1918 தொடக்கம் 1924ஆம் ஆண்டு காலப்பகுதியில் அந்த நாட்டின் கல்வி அதிகாரிகளைத் (Educational Authorities) தெரிவு செய்வதற்காக இம்முறை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. இதேவிடயத்தில் இது புரட்டஸ்தாந்து, மற்றும் கத்தோலிக்க கல்வி முறையினைச் சரியாக முகாமைத்து வப்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப் பட்டதாகும். இதே நோக்கில் பிரித்தானியா் வடஅயர்லாந்தில் 1920களில் இம்முறையினைப் பிரயோகப்படுத்தியதுடன் 1970களின் பின்பு இதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து மீண்டும் இதனை அறிமுகப்படுத்தி யிருக்கின்றனர். முதலாம் உலக மகாயுத்தத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இம்முறையின் அறிமுகத்திற்கான பின்னணியில் சற்று மாற்றம் ஏற்படுத்தப்பட்டு, இது கூடுதலாக அரசியற்கட்சிகளது நலன்பாற் பட்டதாகவே இருந்து வருகின்றது.[4] விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் பல்வேறுபட்ட வகைகள் பின்பற்றப்பட்டு வருகின்றபோதும், இவற்றினை நாம் மூன்று பெரும் பிரிவுகளின் கீழ் அடக்கக்கூடியதாக இருக்கின்றது. அவையாவன: பட்டியல்முறை (List system), தனிமாற்று

வாக்குமுறை (Method of single transferable vote), கலப்புத் தேர்தல் முறை (mixed system)

### பட்டியல் முறை (List system)

இந்த முறைப்படி வாக்காளர் ஒரு கட்சி அல்லது குழு தயாரித்த வேட்பாளர்களை உள்ளடக்கிய பட்டியலுக்கே வாக்களிக்கின்றனர். ஒவ்வொரு பட்டியலுக்கும் கிடைக்கப் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்திற்கு ஏற்ப ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இங்கு விகிதாசாரமானது அந்தந்த நாடுகளில் பின்பற்றப்படும் கணிப்பீட்டு முறைக்கு (formula) ஏற்றவாறும், குறித்த தேர்தல் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களது எண்ணிக்கைக்கு ஏற்றவாறும் சட்டசபையில் பிரதிபலிக்கின்றது. இங்கு வேட்பாளராகத் தெரிவுசெய்யப்படுவதற்கு வேண்டிய மிகக் குறைந்த தகுதியானது (Electoral Threshold) தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு குறித்த புவியியல் எல்லைக்குள்ளிருந்து தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களது எண்ணிக்கை அதிகரிக்கும் போது, குறைந்தபட்சம் ஒரு ஆசனத்தைப் பெறுவதற்கான வாக்குத் தொகையானது குறைவடைவதுடன் விகிதாசாரமும் சரியாகப் பிரதிபலிப்பதற்கு வாய்ப்பு அதிகரிக்கின்றது.[5] எவ்வாறு இருந்தாலும் இப்பட்டியல் முறையானது எளிய பெரும்பான்மை முறையின் சில சாயல்களையும் கொண்டுள்ளதாகவே காணப்படும்.

பட்டியல் முறையின்படி எப்போதும், சில கணிப்பீட்டு முறைகளை (formulae) அடிப்படையாகக் கொண்டே ஒவ்வொரு பட்டியலுக்கும் அவை பெற்றுக்கொண்ட வாக்குகள் ஆசனங்களாக மாற்றப்படுகின்றன. இம்முறையானது 1899ஆம் ஆண்டில் பெல்ஜியம் நாட்டில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அக்காலப் பகுதியில் மேற்கு மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளில் அரசியல் அபிவிருத்திக்குப் பொருத்தமான முறையான தொன்றாகச் செயற்பட்டிருக்கின்றது. இதனைப் பின்பற்றி வரும் ஏனைய நாடுகளாக டென்மார்க், பின்லாந்து, இத்தாலி, அயர்லாந்து, நோர்வே, போத்துக்கல், சுவீடன், ஸ்பெயின், வெனின் சுவலா போன்றனவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

பட்டியல் முறையானது இரண்டு முறையாகப் பின்பற்றப்படுகின்றது.

1. ஆகக்கூடிய சராசரி முறை (Highest Average Method)
2. அதிகப்பட்ட மீதிமுறை (Largest Reminder Method)

### ஆகக்கூடிய சராசரி முறை (Highest Average Method)

இதில் இரண்டு வகையான கணிப்பீட்டு முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவை டிகொண்ட் முறை (d'Hondt formula) செயின்லேக் முறை (saint lague method) என்பனவாகும். டீ கொண்ட் முறையானது ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலே பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்த முறையினால் சிறுபான்மைக் கட்சிகளைவிடக் கூடுதலாகப் பெரும்பான்மைக் கட்சிகளுக்கே நன்மை ஏற்படுகின்றது. இங்கு ஆசனங்கள் பங்கிடப்படுகின்றபோது கட்சிகள் பெறுகின்ற ஆகக்கூடுதலான சராசரி வாக்குகளே கவனத்திற் கொள்ளப்படுகின்றது. பின்வரும் அட்டவணையானது இம்முறையின்

கீழ் ஆறு(6) அங்கத்தவர் கொண்ட மாதிரி தேர்தல் தொகுதியில் ஆசனப் பங்கீடு தொடர்பாக விளக்குகின்றது.

இங்கு ஆசனங்கள் ஒதுக்கப்படும்போது, முதலில் ஒவ்வொரு கட்சிகளுக்கும் கிடைக்கப்பெற்ற வாக்குகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு அவை 1,2,3, என்னும் தொடர் இலக்கங்களால் வகுக்கப்பட்டுப் பட்டியல்படுத்தப்படுகின்றன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆகக் கூடிய சராசரியை எக்கட்சிகள் பெறுகின்றனவோ அதற்கேற்ப ஆசனங்கள் வழங்கப்படுகின்றன. இங்கு மொத்தமாக 6 ஆசனங்கள் இருப்பதனால் உயர்சராசரி முறைப்படி கட்சி A,3 ஆசனங்களையும், கட்சி B,2 ஆசனங்களையும் கட்சி C,1 ஆசனத்தையும் பெறக்கூடியதாக இருக்கும். நுணுக்கமாக நோக்கும்போது, இம்முறையானது சரியான முறையில் விகிதாசாரத்தினைப் பிரதிபலிக்கவில்லை. அட்டவணையில் காட்டியுள்ளபடி கட்சி A,42% மொத்த வாக்குகளுடன் 50% ஆன ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. இதனால் இங்கு பலமான கட்சிகள் கூடுதல் இலாபம் அடையவும் சிறிய கட்சிகள் உரிய பிரதிநிதித்து வத்தைப் பெறமுடியாத நிலையும் ஏற்படுகின்றது. இங்கு கட்சி D,12% வாக்குகளைப் பெற்றும் எந்தவோர் ஆசனத்தினையும் பெறமுடிய வில்லை. இத்தகையதோர் நிலையில் சிறிய கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டுத் தத்தமக்குரிய ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக பெரும்பான்மைக் கட்சிகளில் ஒன்றுடன் கூட்டுச்சேர்ந்தே போட்டியிட வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.[8] எவ்வாறு இருந்த போதும் எளிய பெரும்பான்மை முறையில் அமைந்த தேர்தல் முறையுடன் ஒப்பிடும்போது, இம்முறையின்கீழ் சிறிய கட்சிகளுக்கு ஓரளவு பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது. இம்முறையி லுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற் காகச் சில நாடுகளில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு (modified saint legue) இது பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**அட்டவணை 1**

**ஆகக்கூடிய சராசரி முறையின் கீழான ஆசனப் பங்கீடு**

| கட்சி | வாக்குகள் (V) | V/1 | V/2 | V/3 | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| A | 42,000 | 42,000(1) | 21,000(3) | 14,000(6) | 3 |
| B | 31,000 | 31,000(2) | 15,000(5) | 10,333 | 2 |
| C | 15,000 | 15,000(4) | 7,500 | | 1 |
| D | 12,000 | 12,000 | | | 0 |
| மொத்தம் | 100,000 | | | | |

**ஆதாரம் :** Seymour Martian Lipset (ed.), The Encyclopedia of Democracy (London: Routledge, 1995), vol. III, P. 1011,

## செயின் லேக் முறை (Method of Saint Legue)

ஏனைய முறைகளைப் போலல்லாது அந்தந்த நாடுகளது நிலைமைக்கு ஏற்ப அரசியற்கட்சிகள்மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இந்தமுறையை ஸ்கண்டிநேவிய நாடுகள் கூடுதலாகப் பின்பற்றி வருகின்றன. குறிப்பாக நடுத்தர அளவிலான கட்சிகளுக்கே இங்கு கூடுதலான பிரதிநிதித்துவ வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதுடன் சோஸலிச, ஜனநாயகக் கட்சிகள் பெற்றுவந்த மேலதிக பிரதிநிதித்துவத்தினை குறைவடையச் செய்திருக்கின்றது. இங்கு கட்சிகள் பிளவுபடுவதற்கோ அல்லது புதிய கட்சிகளை உருவாக்கிக் கொள்வதற்கோ வாய்ப்புகள் குறைவாக இருப்பதனால் ஆளும் கட்சிக்கு மட்டுமன்றி ஏனைய வளர்ச்சியடைந்த அரசியற்கட்சிகளுக்கும் சாதகமாகவே இது காணப்படுகின்றது.

இங்கு உண்மையான செயின்லேக் முறையின்கீழ் சரியான விகிதாசாரம் பிரதிபலிப்பதனால் இது பெரிய மற்றும் சிறிய கட்சிகளுக்கும் அவ்வற்றின் பலத்திற்கேற்பச் சமவாய்ப்பு அளிக்கப்படுகின்றது. அத்துடன் சிறிய கட்சிகள் அதிகமாகச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் பெற வாய்ப்பு இல்லாமலும் போகின்றது. இம்முறையின் கீழ் ஆசனங்கள் பங்கிடப்படுகின்றபோது டிகொண்ட் (d'Hont) முறைபோல் இருந்தாலும், ஒவ்வொரு கட்சியும் பெறுகின்ற மொத்த வாக்குகளை வகுக்கும் எண்கள் (divisors) 1,2,3 என்பதற்குப் பதிலாக ஒற்றை எண்கள் மாத்திரமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. (1,3,5,7......) எவ்வாறாயினும் இம்முறையில் காணப்பட்ட சில சிக்கல்கள் காரணமாக இம்முறை ஒரு சில நாடுகளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. சுவீடன், நோர்வே, டென்மார்க் போன்ற நாடுகளில் திருத்தப்பட்ட செயின்லேக் (modified saint legue) முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. இங்கு கட்சிகள் பெற்ற வாக்குகளை வகுப்பதற்குப் பயன்படுத்தப்படும் தொடக்க எண் ஆனது (divisor) ஒன்று என்பதற்குப் பதிலாக 1.4 என்பதாக இருக்கின்றது. இங்கு நடுத்தர அளவிலான கட்சிகளே கூடுதலான நன்மை அடையவாய்ப்புஏற்படுகின்றது.

## அதிகபட்ச மீதிமுறை (Largest Reminder Method)

இம்முறையின்கீழ் குறித்த ஒரு தேர்தல் தொகுதியில் சில ஆசனங்கள் பங்கிடப்படும் போது ஒவ்வொரு கட்சியும் பெறுகின்ற ஆசனங்கள் அவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்திற்கேற்ப அமைகின்றது.[7] ஒரு பல அங்கத்தவர்க்கான தேர்தல் தொகுதி ஒன்றில் ஆசனங்கள் பங்கிடப்படும்போது, முதற்கட்டமாக அங்கு அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் குறித்த பிரதேசத்திற்குரிய மொத்த ஆசனங்களால் வகுக்கப்படும். இதனால் வருகின்ற எண்ணிக்கைத் தகுதி வாக்குகளை (quota) அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கட்சிக்கும் அவ்வவற்றின் வாக்குப் பலத்தினை அடிப்படையாகக்கொண்டு ஆசனங்கள் பங்கிடப்படும். அடுத்த கட்டத்தில் ஏதாவது ஆசனங்கள் பங்கிடப்படாது மீதமாக இருக்குமாயின், முதல் சுற்றில் எச்சமாகவுள்ள வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு அவை பங்கிடப்படும் எண்ணிக்கைத் தகுதியினைக் (quota formula) கணிப்பிடும் போது, ஒரே தடவையில் மாத்திரம் ஆசனங்களைப் பங்கிடமுடியாது மாறாக இரண்டாவது சுற்றில்

மீதமுள்ள வாக்குகளைத் தீர்மானிப்பதால், முதல் சுற்றில் வாக்குகளைப் பகுப்பதற்காகப் பயன்படுத்தப்படும் எண்ணே (divisor) முக்கியத்துவம் வகிக்கின்றது. இவ்வதிகபட்ச மீதிமுறையில் ஐந்து வெவ்வேறு வகைப்பட்ட முறைகளே பின்பற்றப்படுகின்றன (Hare quota, Droop quota, Hamilton method, Hagen bach bischoff quota, Modified quota or Imperial quota and Neimyer method)[8] இங்கு ஆசனப்பங்கீடானது அந்தந்த முறையில் பயன்படுத்தப்படும். கணிப்பீட்டு முறைக்கு ஏற்றவாறு வேறுபட்டிருக்கும்.

**தனிமாற்று வாக்குமுறை (Single Transferable Vote)**

தனிமாற்று வாக்குமுறையின் அறிமுகத்திற்கான அடிப்படையே எளிய பெரும்பான்மைத் தேர்தல் முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. எளிய பெரும்பான்மை முறையின் கீழ் ஒரு பிரதேசமே பல்வேறு சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. ஆனால் தனிமாற்று வாக்கு முறையின்படி தனிப்பட்ட அங்கத்தவர்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப் படுகின்றது. இங்கு தெரிவுசெய்யப்படும் பிரதிநிதியானவர் தம்மைப் பிரதிநிதித்து வப்படுத்திய மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்னும் கடமைப்பாடே மேலோங்கியிருக்கின்றது. இதனால் தொடக்க காலத்தில் இம்முறை தனிப்பட்டோர் பிரதிநிதித்துவமாகவே (Personal representation) கருதப்பட்டது. இம்முறையினை உருவாக்கியவராக தோமஸ் கெயர் (Thomas Hare 1806 - 1891) விளங்குகின்றார்.[9] இவரது திட்டத்தின்படி இங்கிலாந்து தனியான ஒரு தேர்தல் தொகுதியாகக் கொள்ளப்பட்டு அங்கிருந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்படலாம். போட்டியிடும் பல ஆயிரக்கணக்கான வேட்பாளரில் தாம் விரும்புவரை வாக்காளர் விருப்பு வாக்குச்சீட்டின் மூலம் தமது விருப்பு ஒழுங்கின்படி தெரியப்படுத்தலாம்.

இத்தேர்தல் முறையானது விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் மட்டுமல்லாது எளிய பெரும்பான்மை தேர்தல் முறையிலும் (method of simple majority) பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை முதன்முதலில் தேசிய அளவில் பிரயோகப்படுத்திய நாடாக டென்மார்க்கையே நாம் கொள்ளக்கூடியதாக வுள்ளது. (1855 – 1864) இங்கு வாக்காளர்கள் கட்சிக்குப் பதிலாக தமது விருப்பு வாக்குகளைத் தனிப்பட்ட அங்கத்தவர்களுக்கே அளிப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.[10] இங்கு விருப்பு வாக்குகளின் அடிப்படையில் எண்ணிக்கைத் தகுதி வாக்கினை எய்தும் தனிப்பட்ட அங்கத்தவர் முதலில் தெரிவு செய்யப்படுவர். முதல் சுற்றில் எவரும் குறித்த தகுதியை எய்தவில்லையாயின் முதற்சுற்றில் எண்ணிக்கை அடிப்படையில் ஆகக்குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் நீக்கப்படுவதுடன் அவரது வாக்குச்சீட்டின் இரண்டாவது விருப்பு வாக்குகள் கணக்கெடுக்கப்படுகின்றது. இத்தகையதோர் முறையே இங்குள்ள அனைத்து ஆசனங்கள் பங்கிடப்படும்வரை கடைப்பிடிக்கப்படும். இந்த வழிமுறையின் கீழ் கட்சிகளும், தனிப்பட்டோரதும் பலம் வாக்காளர்களது விருப்புகளின் சரியான விகிதாசாரப்படி சட்டசபையிலே பிரதிபலிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. அத்துடன் இங்கு தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் பெற்ற எண்ணிக்கைத் தகுதிக்கு மேற்பட்ட வாக்குகள்

விருப்பத் தெரிவு அடிப்படையில் ஏனை யோருக்கு மாற்றப்படுகின்றது. இதன் கணிப்பீட்டுமுறை சற்றுக் கடினமானதாக இருக்கின்ற போதும் இங்கு செல்லுபடியற்ற வாக்குகள் மிகவும் குறைவாகவேயுள்ளன.

இம்முறையானது 1921இல் இருந்து மால்டாவில் (Malta) சகல மட்டத் தேர்தல்களிலும் 1922 இலிருந்து ஐரிஸ் குடியரசின் தேசிய மட்டத் தேர்தல்கள் யாவற்றிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 1990களிலிருந்து எஸ்தோனியாவில் இம்முறை பயன்படுத்தப்பட்ட போதும். இது பின்பு வெவ்வேறு வகைப்பட்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைகளின் அறிமுகத்தின் பின் மாற்றமடைந்தது. தனிமாற்று வாக்கு முறையின் கீழ் அதன்விதிகளுக்கு மாறான சில தன்மைகள் (anomalies) இருந்தபோதும், எளிய பெரும்பான்மை முறையினை. விட இதன்மூலம் சிறந்த விகிதாசார ரீதியான பலனை (outcome) அடையக்கூடியதாகவேயுள்ளது. இம்முறைப்படி விருப்புத் தெரிவு இருப்பதனால் கட்சிகளுக்கிடையேயும் ஒவ்வொரு கட்சிகளுக் குள்ளும் போட்டி ஏற்பட வாய்ப்பு அதிகமாக வேயுள்ளது.

## கலப்புத் தேர்தல் முறை (Mixed System)

இம்முறையானது ஜேர்மனி நாட்டில் 1946ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். இதில் சாதாரண் பெரும்பான்மை முறையிலான தேர்தல் முறை (Simple majority system) விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறை ஆகியவற்றில் காணப்படும் சாதகமான அம்சங்கள் ஒருங்கிணை க்கப்பட்டு உருவாக்கப்பட்டதாகும். இங்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் இரு முறைகளில் தெரிவுசெய்யப்படுகின்றனர். தனி அங்கத்தவர் தேர்தல் தொகுதி மூலமும், விகிதாசார முறையின் கீழான பட்டியல் முறைப்படியுமே தெரிவு செய்யப்படுவர். இங்கு தேர்தல் தொகுதிமட்டத் தில் எளிய பெரும்பான்மை தேர்தல் முறையில் எழும் விகிதாசாரத்திற்கு மாறான தன்மை (destrotion in district results) தேசிய ரீதியில் அமைந்த பட்டியல் முறையால் நிவர்த்திசெய்யப்பட்டு விகிதாசாரம் பேணப்படு கின்றது. இங்கு இரண்டு வகையான தேர்தல் முறைகள் இருப்பதனால் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படும் அங்கத்தவர்களும் இரு வகைப்பட்டவர்களாக இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படுகின்றது."

இம்முறையினை நடைமுறைப்படுத்தும் போது பிரயோகப்படுத்தப்படும் கணிப்பீட்டு முறையினைப் பொறுத்தே (formula) அதன் முடிவின் தன்மையும் அமையும். கீழ்வரும் அட்டவணையானது இக்கலப்புத் தேர்தல் முறையின் பிரதான இரண்டு வகைகள் பற்றியும் அதன் கீழான உபபிரிவுகள் பற்றியும் விபரிக்கின்றது. கலப்புத் தேர்தல் முறையினை நாம் இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவை இரண்டின் கீழ் சில உபபிரிவுகள் இருப்பதுடன் அவை ஒன்றிலிருந்து இன்னொன்று வேறுபாடு இருப்பதனையும் நடைமுறையில் நாம் காணக்கூடியதாகவுள்ளது.

## ஒருங்கிணைந்த முறை (Method of Co-existence)

இம்முறையின்கீழ் ஒரு பிரதேசம் இரு வகைப்பட்ட தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. இங்கு ஒரு பகுதி சாதாரண பெரும்பான்மை முறைகள் கொண்ட தேர்தல்

தொகுதிகளாகவும், ஏனைய பிரதேசம் விகிதாசாரப் பிரதிநிதித்துவ. முறையினைப் பின்பற்றுவதாகவும் உள்ளது. பிரான்சில் செனெற் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 14,500 அங்கத்தவர்களைக் கொண்ட தேர்தல் கல்லூரி (Electoral college) அமைக்கப்படுகின்றது. இம்முறைப்படி நாட்டின் சகல துறைகளையும் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் தெரிவு நடைபெறுகின்றது. 206 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக சாதாரண பெரும்பான்மை தேர்தல் முறையின் மூலம் தேர்தல் நடைபெறாதபோது முதல் சுற்றில் எவருக்கும் பெரும்பான்மை கிடைக்காவிடில் இரண்டாவது கட்ட வாக்களிப்பு நடாத்தப்படும். இதில் முன்னணியில் இருக்கும் அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர். மிகுதி 98 உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழான டீ கொண்ட் முறைப்படி தெரிவு செய்யப்படுவர். இந்த முறை பனாமா, நைஜீரியா போன்ற நாடுகளில் பாராளுமன்றத் தேர்தலில் பின்பற்றப் படுகிறது.[1]

**உயர்நிலை முறை (Method of Super - Position)**

உயர்நிலை முறையானது கலப்புத் தேர்தல் முறையில் பிரதானமானதொன்றாகக் கருதப்படு கிறது. இங்கு சகல வாக்காளரும் இரண்டு வகையான தேர்தல் முறையிலும் (FPP, PR) பங்கெடுக்கின்றனர். ஒரு தொகுதி அங்கத்தவர் கள் சாதாரண பெரும்பான்மை முறைப்படி அமைந்த சிறிய தொகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட, மீதமுள்ளோர் பெரிய அளவிலான விஸ்தீரணமுடைய தேர்தல் தொகுதிகளின் மூலம் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். ஜப்பான் நாட்டில் இம்முறை 1994ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்பட்டு வருகின்றது. இங்கு 500 உறுப்பினரையுடைய பாராளுமன்றத்திற்கு 300 உறுப்பினர்கள் தனி அங்கத்தவர் தேர்தல் தொகுதிகள் மூலமும், மீதி 200 உறுப்பினர்கள் 11 பெரிய தேர்தல் மாவட்டங்களிலிருந்து விகிதாசார முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவர். இம்முறை ஜேர்மானிய தேர்தல் முறையினைப் போல, தேசிய அளவில்

**அட்டவணை 2**

**கலப்புத் தேர்தல் முறையின் வகைகள் (Types of mixed System)**

| சுதந்திரமாக இயங்கும் இணைப்பு முறை (Independent Combination) | தங்கியிருக்கும் இணைப்பு முறை (Dependent Combination) |
|---|---|
| ஒருங்கிணைந்த முறை (Co existence) | சார்புநிலை முறை (Conditional Method) தேவைப்பட்டால் இரண்டு கணிப்பீட்டு முறைகளும் பின்பற்றப்படலாம் |
| உயர்நிலை முறை (Super- Position) | சார்புநிலை அற்ற முறை (Unconditional Method) |
| கூட்டிணைவுமுறை (Fusion) | |

**ஆதாரம் :** ஆய்வாளரால் தயாரிக்கப்பட்டது.

விகிதாசாரம் பிரதிபலிப்பதற்காக ஒரு முறை இன்னொரு முறையுடன் தொடர்புபடுத்தப்படு வதில்லை, மாறாக இரண்டும் தனித்தனியான முடிவுகளைக் கொடுக்கின்றன. இத்தேர்தல் முறைப்படி பெரும்பாலான நாடுகளில் விகிதாசார ரீதியாகத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தனி ஒரு தேர்தல் தொகுதியி லிருந்தே தெரிவு செய்யப்படுவதுடன் சில நாடுகளில் ஒன்றிற்கு மேற்பட்ட தொகுதிகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன.[3]

**கூட்டிணைவு முறை** (Method of Fusion)

இத்தேர்தல் முறையின்படி ஒரு தேர்தல் தொகுதியில் இரு தேர்தல் முறையும் ஒரே நேரத்தில் ஒருங்கிணைத்தே பிரயோகப்படுத்தப் படுகின்றது. இன்றைய உலகில் பிரான்ஸ் நாட்டில் உள்ள மாநகரசபைகளுக்கான தேர்தலில் மாத்திரம் இம்முறை பயன்படுத்தப் பட்டு வருகின்றது. இங்கு 3500இற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட ஒவ்வொரு மாநகரசபையும் தேர்தல் தொகுதிகளாகக் கொள்ளப்படுகின்றது. இங்கு முதல் சுற்றில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளில் எக்கட்சி கூடுதல் பெரும்பான்மை பெறுகின்ற தோ, அதற்கு குறித்த தொகுதியின் அரைவாசி ஆசனங்களைப் பெறுவதற்கானதகுதி ஏற்படுகின்றது. இங்குள்ள ஏனைய அரைவாசி ஆசனங்கள், விகிதாசார முறைப்படியான டீ கொண்ட கணிப்பீட்டு முறையின்படி தெரிவு செய்யப்படுகின்றது. முதல் சுற்றில் எந்த ஒரு பட்டியலும் குறித்த பெரும்பான்மையைப் பெறாதுவிட்டால் இரண்டாவது கட்டத்தெரிவு இடம்பெறும். இங்கு குறித்த நேரத்தில் 10 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றோருக்கிடையில் தெரிவு நடைபெறுகின் றது. இதனால் சிறிய கட்சிகள் தமக்கான ஆசனங்களைப் பெறுவதற்காக, பெரிய கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுகின்றன. இங்கு நடைமுறைப்படுத்தப்படும் இரு தேர்தல் முறைகளும் ஒன்றில் ஒன்று தங்கியிருக்காது தனித்தனியாகவே செயற்படுகின்றன.[4]

**தங்கியிருக்கும் இணைப்புமுறை** (Dependent Combination)

இத்தேர்தல் முறையின்படி ஒரு நாட்டின் தேர்தலின் இறுதி முடிவானது இரண்டு முறைகளுடன் தொடர்புபட்டதாக இருப்பதுடன் (PR, FPP) ஒரு முடிவு இன்னொன்றால் நிர்ணயிக்கப்படுகின்றது. இத்தகைய இறுதி முடிவின் வெளிப்பாடு சட்டரீதியான சில வரையறைகளினால் நிர்ணயிக்கப்படும். இம்முறை பற்றிய விளக்கத்தினை இத்தாலிய நாட்டின் அனுபவங்கள் எடுத்துக்காட்டு கின்றன. 1923ஆம் ஆண்டில் இத்தாலியச் சட்டப்படி தேசிய ரீதியில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும் கட்சிகளுக்கு 2/3 பங்கு ஆசனங்கள் வழங்கப்பட்டிருந்தது. அத்தோடு குறித்த கட்சி குறைந்தது 25 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். ஒதுக்கப்பட்ட ஆசனங்களைவிட மீதமுள்ள ஆசனங்கள் விகிதாசார முறைப்படி பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இத்தகைய முறையே 1919 பிரான்சிய சட்டத்திலும் 1926ஆம் ஆண்டில் றோமானியச் சட்டத்திலும், 1951 இத்தாலிய தேர்தல் சட்டத்திலும் காணப்பட்டது.[5] இந்தக் கலப்பு முறையின்படி வாக்களிப்பு முறையிலும் ஆசனக்கணிப்பீட்டிலும் சிக்கலான தன்மை காணப்படுகின்றது. அத்துடன் தேர்தலில் பல முறைகேடுகள் நடக்கவும் இம்முறை வாய்ப்பளிக் கிறது.

**விமர்சன மதிப்பீடு** (Critical Assessment) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது ஒரு நாட்டிலுள்ள வெவ்வேறு இன சமூக குழுக்களுக்குள் கருத்தியல் ரீதியான வெவ்வேறு பட்ட வகுப்பினர் இருக்கின்றபோதும் அவர்கள் தத்தமக்குரிய பிரதிநிதித்துவத்தினை பெறக்கூடி யதான வாய்ப்பினை ஏற்படுத்து கின்றது. இம்முறையானது பொதுவாக இயல்புக்கு மாறான கூட்டுக்கள் ஏற்படுத்தப்படு வதனை கூடுதலாக தவிர்ப்பதுடன் ஒரு கட்சி இன்னொரு கட்சியினுள் கலந்து தனது சுய அடையாளத்தை இழந்து போவதைத் தடை செய்கின்றது. இதனால் ஒவ்வொரு கட்சியும் குழுவும் தத்தம் சுய பிரதிநிதித்துவத்தினைப் பெறுவதற்கேற்ப வாய்ப்பு ஏற்படுத்தப் படுகின்றது. இந்த முறையில் துல்லியமான கணிப்பீட்டு முறை பயன்படுத்தப் படும் போது சரியான விகிதாசாரத்தில் வாக்குப் பெறுமதி (value of votes) ஏற்படுவதற்கு வழிவகுக்கப்படுகின்றது. இதனால் சமூகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் உற்சாகத்துடன் தேர்தலில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்பு இயற்கையாகவே ஏற்படுகின்றது. அத்துடன் கட்சியும் அதன் சார்பாகப் போட்டியிடும் அங்கத்தவர்களும் வாக்காளருடன் சுமூகமான தோர் உறவினைப் பேணுவதன் மூலம் பங்குபற்றுதல் மேலும் ஊக்குவிக்கப்படுகின்றது.

இந்த முறையின்கீழ் தனியொரு கட்சி அறுதிப் பெரும்பான்மையையோ அல்லது (2/3) மூன்றில் இரண்டு பெரும்பான்மையையோ பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லாதிருப்ப தனால் தனியான கட்சியோ அல்லது குழுவோ அந்தந்த நாடுகளது சட்டசபையினைத் தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது சாத்தியமற்றதாகின்றது.[15] எடுத்துக்காட்டாக நியூசிலாந்தில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்பு (1993) எந்தவொரு கட்சியும் சிறிய கட்சிகளது ஆதரவின்றி ஆட்சியமைக்க முடியாது போய்விட்டது. இங்கு கூட்டுக்கட்சிகளது அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னரும், அவை ஆகக்கூடிய பெரும்பான்மையினைப் பெறமுடியாது போய்விட்டது. இதனால் சிறிய கட்சிகளது முக்கியத்துவம் மேலும் உறுதிப்படுத் தப்படுகின்றது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் முக்கியமான அடிப்படை சமூகத்திலுள்ள சகல வகுப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்து வதாகும். சிறுபான்மையினரும், பால், இன, மொழி ரீதியான வேறுபாடுகளைக் கடந்து தேசிய அரசியலில் பங்கெடுப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாகியிருக்கின்றன. இம்முறை ஆட்சியாளரை வழிப்படுத்தவும், அவர்களை ஜனநாயக ரீதியாகச் செயற்பட வைக்கவும் தூண்டுகிறது.[17] இம்முறை சில குறிப்பிட்ட சிறுபான்மை இனத்தவருக்கு மாத்திரம் வாய்ப்பினை அளித்து ஏனைய குழுக்களை முரண்பட வைப்பதற்கான வாய்ப்பினைக் கொடுக்கவில்லை. இதற்கும் மேலாக இம்முறையின் கீழ் சில சிறுபான்மையினர் தம்மை அடையாளப்படுத்திக் (Self identification) காட்டுவதற்கு வாய்ப்புக் கொடுப்பதுடன் பொதுவாக இங்கு முன்கூட்டியே சில சிறுபான்மை இனத்துக்கு சிறப்பு வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றது.[18]

எளிய பெரும்பான்மை முறையில் அமைந்த தேர்தல் முறை போலல்லாது விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது கூடுதலாகக் கட்சிகளை மையப்படுத்தியமையும். இதனால் இம்முறை கட்சிகள் சரியான ஆட்சி முறையினை

ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பினை உருவாக்குகின்றது எனலாம். பட்டியல் முறைப்படி கட்சிகளுக்கிடையே போட்டி ஏற்படுவதும், அவை தத்தமது செல்வாக்கினை வளர்த்துக்கொள்வதற்கும், நல்லாட்சி ஏற்படுத்துவதற்குமான வகையில் தூண்டப்படுகின்றன. இங்கு தவறான முறையில் தேர்தல் களைக் கையாள்வதற்கான வாய்ப்புக்கள் (Opportunity of temptation for gerrymandering) கணிசமான அளவில் குறைவடைந்துள்ளன.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை பற்றிய குறைபாடுகள் தொடர்பாகப் பல கருத்துக்கள் நிலவியபோதும் பொதுவாக இதனை விமர்சிக்கும்போது முக்கியமாக இரண்டு விடயங்களே மையப்படுத்தப்படுகின்றன. இந்த முறை எப்போதும் கூட்டுக்கட்சி அரசாங்கத்திற்கே வழிவகுக்கும் என்பதும், மக்களுக்கும் அவர்களது பிரதிநிதிகளுக்கும் இடையேயான தொடர்பு ஏனைய தேர்தல் முறைகளுடன் ஒப்பிடும்போது அற்றுப் போகின்றநிலையை தோற்றுவிக்கும் என்பதேயாகும். அதாவது இங்கு பெரும் விஸ்தீரணமுடைய பல அங்கத்தவர் தேர்தல் தொகுதிகளிலிருந்து பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதனால் பிரதிநிதிகளுக்கும் வாக்காளருக்கும் இடையேயான தொடர்பு அற்றுப் போகின்றது. இந்தநிலை நமீபியா, இஸ்ரவேல், தென்னாபிரிக்கா, போன்ற நாடுகளில் காணக்கூடியதாகவுள்ளது.

கட்சிப் பட்டியல் முறைப்படி வாக்காளர்கள் தாம் நினைத்த உறுப்பினரைப் பட்டியலில் புகுத்துவதற்கான உரிமை அற்றவர்களாக இருக்கின்றனர். வாக்காளர்கள் கட்சிகளாக வோ அல்லது சுயேட்சைக் குழுக்களாகவோ சமர்ப்பிக்கப்படும் பட்டியலுக்கே வாக்களிப்பர். இம்முறை எப்போதும் கட்சிகளது மேலாதிக்கத்திற்கே வழியேற்படுத்திக் கொடுப்பதுடன் கட்சித் தலைவர்களுக்கே கூடுதல் அதிகாரங்களை வழங்குகின்றது. வாக்காளரைவிடக் கட்சிகளே நாட்டினை ஆட்சி செய்பவரைத் தீர்மானிக்கும் பொறுப்பினை வகிக்கின்றன. இங்கு சிறிய மற்றும் தனிக்கட்சிகளைவிட பெரும் கட்சி அல்லது கூட்டுக்கட்சிகளுக்கே வாய்ப்பு ஏற்படுகின்றது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையானது பல சாதக பாதகமான தன்மைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றபோதும் அதன் விளைவுகளை ஒரு நாட்டின் சமூக அமைப்பு, அதன் தன்மை, அரசியல், வரலாற்றுப் பின்னணிகள், அரசியற்கட்சி அமைப்பு, அவற்றின் போக்குகள், மக்களது அரசியல் விழிப்புணர்ச்சி, பங்கு பற்றுதல் போன்ற இன்னோரன்ன காரணிகளினால் நிர்ணயிக்கப்படுகின்றது. எவ்வாறு இருந்தபோதும் இம்முறையானது எளிய பெரும்பான்மை முறையில் அமைந்த தேர்தல் முறையினைவிடப் பல மடங்கு சிறந்ததாக இருப்பதுடன் பல்வேறு காரணிகளினால் பிளவுபட்டுள்ள ஒரு நாட்டிற்குப் பொருத்தமான ஒரு தேர்தல் முறையாகவே கொள்ளக் கூடியதாகவுள்ளது.